**ஆகஸ்ட் – 19**

# TNPSC துளிகள்

- பெங்களூருவின் மஞ்சள் வழித்தடம் ஆனது நம்ம மெட்ரோ வழித்தடத்தினை 96 கி.மீ தொலைவு வரை விரிவுபடுத்தியதுடன், டெல்லி மெட்ரோவின் 353.3 கி.மீ. நீள வழித்தடத்திற்கு அடுத்தப்படியாக இந்தியாவின் இரண்டாவது பெரிய மெட்ரோ வலையமைப்பாக மாறியுள்ளது.
- சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் ஆனது, 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று தனியார் வாகனங்களுக்கு 200 சுங்கச் சாவடி வழி பயணங்கள் அல்லது ஓராண்டுப் பயணத்தை 3,000 ரூபாயில் வழங்குவதற்கான FASTag வருடாந்திர அனுமதிச் சீட்டினை அறிமுகப்படுத்தியது.
- அரசுகளுக்கிடையேயானப் பேச்சுவார்த்தைக் குழுவின் (INC) ஆறாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் உடன்பாடு ஏதும் இல்லாமல் முடிவடைந்தன.
  - நெகிழி மாசுபாடு குறித்த சட்டப்பூர்வ ஒப்பந்தத்தினை வரைவதற்காக ஜெனீவாவில் இந்த பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## VETRI பள்ளிகள்




- தமிழ்நாடு அரசானது, 236 அரசு உயர்நிலைப் பள்ளிகளில் VETRI (துடிப்பான கல்வியை இலக்காகக் கொண்ட புகழ்பெற்ற நிறுவனம்) பள்ளிகளுக்கு 54.73 கோடி ரூபாயை அனுமதித்தது.
- 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களை சிறந்த கல்வி நிறுவனங்களில் பயிலச் செய்வதற்காக, ஒரு தொகுதிக்கு ஒரு பள்ளியானது VETRI பள்ளியாகத் தேர்ந்தெடுக்கப்படும்.
- தன்னார்வ அடிப்படையில் மாணவர்களுக்கு JEE, NEET, CLAT மற்றும் CUET ஆகியவற்றுக்கான பயிற்சி வார இறுதி நாட்களில் நடத்தப்படும்.
- ஒவ்வொரு தொகுதிக்கும் 2 அரசு ஆசிரியர்கள் மற்றும் 4 தற்காலிக ஆசிரியர்கள் அடுத்தடுத்த மாற்று வார இறுதிகளில் பயிற்சி அமர்வுகளை நடத்துவர்.
- மாவட்ட மாதிரிப் பள்ளிகள் கல்விக்கான பொருட்கள், இயங்கலை வழி வகுப்புகள் மற்றும் தொழில் முறை வழிகாட்டுதலுடன் உதவுகிறது.

# தேசியச் செய்திகள்

## குழாய் நீர் மற்றும் நிலத்தடி நீர் பரவல்

- தற்போதைய நிலவரப்படி, ஜல் ஜீவன் திட்டத்தின் (JJM) கீழ், 15.68 கோடிக்கும் மேற்பட்ட கிராமப்புற குடும்பங்கள் (19.36 கோடியில் 81%) செயல்பாட்டில் உள்ள குழாய் நீர் இணைப்புகளைக் கொண்டுள்ளன.
- 2019 ஆம் ஆண்டில் JJM திட்டம் தொடங்கப்பட்ட காலத்தில், 3.23 கோடி (17%) கிராமப்புற வீடுகளில் மட்டுமே குழாய் நீர் இணைப்புகள் இருந்தன.
- ஆதார் உடன் இணைக்கப்பட்ட பயனாளித் தரவு, புவிசார் குறியீடு, மூன்றாம் தரப்பு ஆய்வுகள் மற்றும் IoT அடிப்படையிலான நீர் அளவீடு போன்ற கண்காணிப்புக் கருவிகள் மூலம் நீர் தரம் மற்றும் பரவலை JJM உறுதி செய்கிறது.
- அடல் புஜல் யோஜனா (ABY) திட்டமானது, ஏழு மாநிலங்களில் உள்ள 229 தொகுதிகளில் உள்ள 8,203 நீர் பற்றாக்குறை உள்ள கிராம பஞ்சாயத்துகளில் நிலத்தடி நீர்க் குறைபாட்டை 6,000 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் நிவர்த்தி செய்கிறது.
- இதுவரை, ABY திட்டத்தின் பங்கேற்பு, செயல்திறன் அடிப்படையிலான அணுகுமுறையின் கீழ் அடையாளம் காணப்பட்ட 83 தொகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் மேம்பட்டுள்ளது.




## 2024-25 நிதியாண்டில் ஆயுத ஏற்றுமதிகள்


- பாதுகாப்புத் துறை ஏற்றுமதிகள் 2024-25 ஆம் நிதியாண்டில் சாதனை அளவான 23,622 கோடி ரூபாயை (~2.76 பில்லியன் டாலர்) எட்டியுள்ளன. இது 2023-24 ஆம் நிதியாண்டில் பதிவான 21,083 கோடி ரூபாயிலிருந்து 12.04% அதிகரிப்பினைக் குறிக்கிறது.
- இது 2013-14 ஆம் நிதியாண்டில் பதிவான 686 கோடி ரூபாயிலிருந்து 34 மடங்கு அதிகரிப்பைக் குறிக்கிறது.
- சுமார் 80 நாடுகளுக்கு பாதுகாப்புத் துறை பொருட்களை ஏற்றுமதி செய்கின்ற இந்தியா 2029 ஆம் ஆண்டிற்குள் 50,000 கோடி ரூபாய் மதிப்பிலான ஏற்றுமதியை இலக்காகக் கொண்டுள்ளது.
- 2024-25 ஆம் நிதியாண்டில் ஏற்றுமதியில் தனியார் துறை 15,233 கோடி ரூபாய்

பங்களித்தது மற்றும் அரசின் பாதுகாப்புத் துறை நிறுவனங்கள் 8,389 கோடி ரூபாய் பங்களித்தன.

- ❖ அரசு பாதுகாப்புத் துறை உற்பத்தி நிறுவனங்களின் ஏற்றுமதி முந்தைய ஆண்டை விட 42.85% அதிகரித்துள்ளது.
- ❖ 2024-25 ஆம் நிதியாண்டில் 1,762 ஏற்றுமதி அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன, இது 1,507 ஆக இருந்த முந்தைய ஆண்டை விட 16.92% அதிகமாகும்.
- ❖ 2024-25 ஆம் நிதியாண்டில் பாதுகாப்புத் துறை ஏற்றுமதியாளர்கள் 17.4% அதிகரித்துள்ளனர்.




## மக்காச்சோளம் சாகுபடி பரப்பளவு




- ❖ இந்தியாவில் மக்காச் சோளம் சாகுபடி 2025–26 ஆம் ஆண்டின் காரீஃப் பயிர்ப் பருவத்தில் 91.89 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது. இது கடந்த ஆண்டு 83.15 லட்சம் ஹெக்டேராக இருந்தது.
- ❖ இந்த 10.5 சதவீத உயர்வு ஆனது E20 எத்தனால்-கலப்புத் திட்டத்தால் உந்தப்பட்டு,


மக்காச்சோளத்தின் தேவை மற்றும் விலைகளை அதிகரித்தது.

- மொத்த எத்தனால் உற்பத்தியில் 42.74 சதவீத பங்களிப்பை வழங்குவதுடன், 2023–24 ஆம் ஆண்டில் மக்காச்சோளம் முதன்மையான எத்தனால் மூலப் பொருளாக மாறியது.
- இந்த மாற்றம் எண்ணெய் வித்துகளின் சாகுபடிகளுக்கான நிலத்தை சுமார் 7 லட்சம் ஹெக்டேர்களாகவும், துவரை சாகுபடிக்கு 2 லட்சம் ஹெக்டேர்களாகவும் குறைத்துள்ளதால் உணவு மற்றும் ஊட்டச்சத்து சார்ந்த அச்சுறுத்தல்களை எழுப்பியுள்ளது.
- கோழி மற்றும் கால்நடை தீவனத் துறைகளில் இந்தியாவின் மக்காச் சோளத்தில் 60 முதல் 70 சதவீதம் வரை பயன்படுத்துவதால், தற்போது அவை நெருக்கடியை எதிர்கொள்கின்றன.
- எத்தனால் தொடர்பான ஊக்கத்தொகைகள் காரணமாக கரும்பு சாகுபடி பரப்பும் 1.64 லட்சம் ஹெக்டேர்களாக அதிகரித்துள்ளது, அதே நேரத்தில் சோயா அவரை சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## அலாஸ்கா உச்சி மாநாடு

- அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மற்றும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் இடையேயான 2025 ஆம் ஆண்டு அலாஸ்கா உச்சிமாநாட்டை இந்தியா ஆதரித்தது.
- உக்ரைனில் நடைபெற்று வரும் மோதலை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு உதவுவதை இந்த உச்சிமாநாடு நோக்கமாகக் கொண்டிருந்தது.
- ஆனால் இறுதியில் ரஷ்யா-உக்ரைன் மோதல் தொடர்பாக எந்த பலனளிக்கும் முடிவும் எட்டப்படவில்லை.




## பாலஸ்தீன அங்கீகாரம் - ஆஸ்திரேலியா

- செப்டம்பர் மாதத்தில் நடைபெற உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில் ஆஸ்திரேலியா பாலஸ்தீன அரசை அங்கீகரிக்க உள்ளது.

- ஸ்பெயின், அயர்லாந்து, நார்வே, ஐக்கியப் பேரரசு, பிரான்சு, கனடா மற்றும் நியூசிலாந்து எடுத்த ஒத்த முடிவுகளைத் தொடர்ந்து இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப்பட உள்ளது.
- இராணுவமயமாக்கல், பொதுத் தேர்தல்களை நடத்துதல் மற்றும் இஸ்ரேலின் இருப்பு உரிமையை அங்கீகரித்தல் ஆகியவற்றுக்கான பாலஸ்தீன அதிகாரசபையின் உறுதிமொழிகளின் அடிப்படையில் அங்கீகாரம் வழங்கப்படுகிறது.
- ஐக்கிய நாடுகள் சபையின் 193 உறுப்பினர் நாடுகளில் மொத்தம் 147 நாடுகள் தற்போது பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கின்றன.




## நீர்சார் முதலீடுகள் குறித்த உலகளாவிய கண்ணோட்ட சபை (GOCWI)




- தென்னாப்பிரிக்க அதிபர் சிரில் இராமபோசா GOCWI சபையினைத் தொடங்கி வைத்து, இந்தியப் பிரதமர் மற்றும் பிற உலகத் தலைவர்களை இந்தச் சபையின் உறுப்பினர்களாகச் சேர அழைப்பு விடுத்தார்.
- G20 அமைப்பின் முன்னெடுப்பான GOCWI, உலகளாவிய பருவநிலை மற்றும் நிதி விவாதங்களில் நீர்சார் முதலீட்டிற்கு முன்னுரிமை அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது G20, UN, MDB மற்றும் தனியார் துறைகளில் முன்னேற்றத்தைக் கண்காணிக்கும், நிதியை வெளிக்கொணரும் மற்றும் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும்.
- ஆப்பிரிக்கா நீர்சார் முதலீட்டுத் திட்டம் (AWIP) ஆனது தற்போது உலகளாவிய நீர்


முதலீட்டுத் தளமாக (GWIP) மேம்படுத்தப்படும்.

- G20 அமைப்பிற்கான தென்னாப்பிரிக்கா தலைமையின் கீழ் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு ஆப்பிரிக்கா நீர்சார் முதலீட்டு உச்சி மாநாட்டின் போது இது தொடங்கப்பட்டது.
- சபையின் உறுப்பினர்களில் இந்தியா, பிரேசில், ஐக்கியப் பேரரசு, ஜெர்மனி, மெக்சிகோ, சவுதி அரேபியா, ஆஸ்திரேலியா, EU, அங்கோலா மற்றும் செனகல் ஆகிய நாடுகளின் தலைவர்கள் அடங்குவர்.


# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவின் முன்னணி ஏற்றுமதி நாடுகள் 2024

- 2023–24 ஆம் ஆண்டில் இந்தியாவின் ஏற்றுமதி 778.21 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியது.
- இதில் 437.10 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான சரக்குகள் ஏற்றுமதியும், 341.11 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான சேவை ஏற்றுமதியும் அடங்கும்.
- 2013–14 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது ஏற்றுமதி மதிப்பு 67% அதிகரித்துள்ளது.
- 17.90% பங்கைக் கொண்ட அமெரிக்கா, இந்தியாவின் சிறந்த ஏற்றுமதி நாடாக இருந்தது.
- அதைத் தொடர்ந்து 8.23% பங்குடன் ஐக்கிய அரபு அமீரகம் (UAE) மற்றும் 5.16% பங்குடன் நெதர்லாந்து மூன்றாவது இடத்தையும் பிடித்தன.
- இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில், முன்னணி 10 நாடுகள் இணைந்து 50.98% பங்கைக் கொண்டிருந்தன.
- 2004 முதல் 2024 ஆம் ஆண்டு வரை இந்தியாவின் முன்னணி ஏற்றுமதி பிராந்தியமாக வட அமெரிக்கா தொடர்ந்து திகழ்ந்தது.
- முன்னணி 10 இடங்களில் சீனா (3.85%), சிங்கப்பூர் (3.33%), ஐக்கியப் பேரரசு (3.00%), சவுதி அரேபியா (2.67%), வங்காளதேசம் (2.55%), ஜெர்மனி (2.27%), மற்றும் இத்தாலி (2.02%) ஆகியவை அடங்கும்.




## இந்தியாவின் கச்சா எண்ணெய் இறக்குமதி




- ஆகஸ்ட் மாதத்தில் இந்தியா ஒரு நாளைக்கு 2 மில்லியன் பீப்பாய்கள் (bpd) ரஷ்ய கச்சா எண்ணெயை இறக்குமதி செய்தது, இது ஜூலை மாதத்தில் 1.6 மில்லியன் bpd ஆக இருந்தது.
- ஆகஸ்ட் மாதத்தின் முதல் பாதியில் இந்தியா இறக்குமதி செய்த 5.2 மில்லியன் bpd எண்ணெயில் ரஷ்ய கச்சா எண்ணெய் 38 சதவீதமாகும்.
- ஈராக்கிலிருந்து மேற்கொள்ளப்பட்ட இறக்குமதி 730,000 bpd ஆகவும், சவுதி அரேபியாவிலிருந்து மேற்கொள்ளப்பட்ட இறக்குமதி 526,000 bpd ஆகவும் குறைந்தது, இது ஜூலை மாதத்தில் 700,000 bpd ஆக இருந்தது.
- Kpler தரவுகளின்படி, 264,000 bpd உடன் அமெரிக்கா ஐந்தாவது பெரிய கச்சா எண்ணெய் வழங்கீட்டாளராக இருந்தது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## கோல்டன் டோம் எறிகணை பாதுகாப்புக் கவசம்




- கோல்டன் டோம் (GD) என்பது எதிரி நாட்டின் கண்டம் விட்டு கண்டம் பாயும்

எறிகணைகளுக்கு (ICBMs) எதிராக நாட்டினைப் பாதுகாக்க வடிவமைக்கப்படும் ஒரு அமெரிக்க எறிகணை பாதுகாப்பு அமைப்பாகும்.

- விண்வெளி அடிப்படையிலான செயற்கைக்கோள்கள், இடைமறிப்புக் கணைகள் மற்றும் லேசர்கள் ஆகியவற்றின் வலையமைப்பைப் பயன்படுத்தி எறிகணைகளை ஏவப்பட்ட உடனேயே அதன் "உந்துதல் கட்டத்திலேயே" இடைமறிப்பதை இந்த அமைப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கோல்டன் டோம் நான்கு பாதுகாப்பு அடுக்குகளைக் கொண்டிருக்கும்:
    - செயற்கைக்கோள்களைப் பயன்படுத்தி விண்வெளி அடிப்படையிலான இடைமறிக்கும் அடுக்கு.
    - கலிபோர்னியா மற்றும் அலாஸ்காவில் உள்ள மேம்படுத்தப்பட்ட தரைக் கட்டுப்பாடு அடிப்படையிலான நடுவழி பாதுகாப்பு (GMD) அமைப்பு.
    - ஐந்து புதிய நிலம் சார் ஏவுதளங்கள் (அமெரிக்காவின் பிரதான நிலப்பகுதியில் மூன்றும், அலாஸ்காவில் ஒன்று, ஹவாயில் ஒன்று).
    - நகரங்களுக்கான வரையறுக்கப்பட்ட பகுதி பாதுகாப்பு, புதிய ரேடார்கள், ஒரு பொதுவான ஏவு அமைப்பு மற்றும் பேட்ரியாட் எறிகணைப் பாதுகாப்பு போன்ற அமைப்புகளை இணைத்தல்.
- இரும்புக் கவசம் ஆனது சிறிய பகுதிகளையே எறிகணைகளிலிருந்து பாதுகாக்கிறது, ஆனால் GD நாடு தழுவிய, பல அடுக்கு எறிகணை இடைமறிப்புத் திறனைக் கொண்டுள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஆசிய சிங்கங்களின் எண்ணிக்கை




- 2020 ஆம் ஆண்டில் 674 ஆக இருந்த இந்தியாவின் ஆசிய சிங்கங்களின் எண்ணிக்கையானது 2025 ஆம் ஆண்டில் 891 ஆக அதிகரித்துள்ளது, இது 32.2% வளர்ச்சியைக் குறிக்கிறது.
- 260 ஆக இருந்த வளர்ச்சியடைந்த பெண் சிங்கங்களின் எண்ணிக்கையானது 330 ஆக

உயர்ந்து, இனங்களின் இனப்பெருக்க வலிமையை 27% மேம்படுத்தியுள்ளது.

- மொத்தம் 497 சிங்கங்கள் தற்போது குஜராத்தில் உள்ள ஒன்பது பிராந்தியங்களில் சிறுசிறு குழுவாக வாழ்கின்றன.
- முதல் முறையாக, குஜராத்தின் வழித்தடப் பகுதிகளில் 22 சிங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- கடந்த பத்து ஆண்டுகளில் சிங்கங்களின் எண்ணிக்கை 70 சதவீதத்திற்கும் மேலாக அதிகரித்துள்ளது.
- இந்தக் காலகட்டத்தில் அவற்றின் வாழ்விடப் பரவல் வரம்பு சுமார் 60% விரிவடைந்துள்ளது.
- குஜராத்தில் உள்ள அம்ரேலி மாவட்டத்தில் 82 வளர்ச்சியடைந்த ஆண் சிங்கங்கள், 117 வளர்ச்சியடைந்த பெண் சிங்கங்கள் மற்றும் 79 குட்டிகள் உள்ளன.
- மிடியாலா வனவிலங்கு சரணாலயத்தில் (குஜராத்) 100% வேகமான அதிகரிப்பு பதிவானது, அதைத் தொடர்ந்து பாவ்நகர் பிரதான நிலப்பகுதி 84% அதிகரிப்பு பதிவானது.
- கிர்னார் வனவிலங்கு சரணாலயம் (குஜராத்) மற்றும் பாவ்நகர் கடற்கரை (குஜராத்) ஆகியவற்றில் முறையே 4% மற்றும் 12% சரிவு பதிவாகியுள்ளன.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## மிகவும் மதிப்புமிக்க குடும்ப வணிகங்கள் 2025

**India’s Top 10 Most Valuable Family Businesses in 2025:**


| Rank | Business Group | Family Name | Valuation (INR, Crore) |
|---|---|---|---|
| 1 | Reliance Industries Limited | Ambani Family | 28,23,100 |
| 2 | Aditya Birla Group | Kumar Mangalam Birla Family | 6,47,700 |
| 3 | JSW Group | Jindal Family | 5,70,900 |
| 4 | Bajaj Group | Bajaj Family | 5,64,200 |
| 5 | Mahindra Group | Mahindra Family | 5,43,800 |
| 6 | HCL | Nadar Family | 4,68,900 |
| 7 | Cholamandalam Investment & Finance | Murugappa Family | 2,92,400 |
| 8 | Wipro | Premji Family | 2,78,600 |
| 9 | Hindustan Zinc | Anil Agarwal Family | 2,55,000 |
| 10 | Asian Paints | Dani, Choksi & Vakil Families | 2,20,900 |

- ஹுருன் இந்தியா 2025 ஆம் ஆண்டின் மிகவும் மதிப்புமிக்க குடும்ப வணிகங்கள் பட்டியலானது, பார்க்லேஸ் பிரைவேட் கிளைண்ட்ஸ் மற்றும் ஹுருன் இந்தியா நிறுவனத்தினால் வெளியிடப்படுகின்றது.
- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் அம்பானி குழுமம் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக 28.23 லட்சம் கோடி மதிப்பீட்டில் முதலிடத்தில் உள்ளது.
- ஆதித்யா பிர்லா குழுமத்தின் குமார மங்கலம் பிர்லா குடும்பம் 6.48 லட்சம் கோடி ரூபாய் மதிப்புடன் இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

- JSW குழுமத்தின் ஜிண்டால் குடும்பம் ₹5.71 லட்சம் கோடி ரூபாய் மதிப்புடன் முதல் முறையாக (மூன்றாவது) முதல் மூன்று இடங்களுக்குள் நுழைந்தது.
- கடைசியில், அனில் அகர்வால் குடும்பம் (இந்துஸ்தான் சிங்க்) 2.55 லட்சம் கோடி ரூபாயுடன் 9வது இடத்தையும், டானி, சோக்ஸி & வக்கீல் குடும்பங்கள் (ஆசியன் பெயிண்ட்ஸ்) 2.21 லட்சம் கோடி ரூபாயுடன் 10வது இடத்தையும் பிடித்தன.
- முதல் 300 இந்திய குடும்ப வணிகங்களின் மொத்த சொத்துக்கள் 1.6 டிரில்லியன் டாலர் அல்லது 134 லட்சம் கோடி ரூபாயாக உள்ளன, இது துருக்கி மற்றும் பின்லாந்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை விட அதிகமாகும்.

# மாநிலச் செய்திகள்

## இந்தியாவில் தெருநாய்களின் நிலவரம்




- 2025 ஆம் ஆண்டில், ஒடிசா, ஜம்மு & காஷ்மீர், உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் அவற்றின் மக்கள்தொகையுடன் ஒப்பிடும்போது 1,000 நபர்களுக்கு அதிகபட்ச எண்ணிக்கை என்ற கணக்கில் அதிக எண்ணிக்கையிலான தெருநாய்கள் அங்கு பதிவாகியுள்ளன.
- மோசமான கழிவு மேலாண்மை மற்றும் கருத்தடை நடவடிக்கை இல்லாத காரணத்தால், 1,000 நபர்களுக்கு தோராயமாக 39–40 தெருநாய்களுடன் ஒடிசா முதலிடத்தில் உள்ளது.
- ஜம்மு & காஷ்மீர் 1,000 நபர்களுக்கு 22.9 தெருநாய்கள் உள்ளன.
- உத்தரப் பிரதேசத்தில் நகர்ப்புறங்களில் அதிக அடர்த்தியுடன் 20 லட்சத்திற்கும் அதிகமான தெருநாய்கள் உள்ளன.
- கருத்தடை மற்றும் தடுப்பூசி முயற்சிகளில் மெதுவான முன்னேற்றம் காரணமாக கேரளாவில் சுமார் 2.5 லட்சம் தெருநாய்கள் உள்ளன.

# விளையாட்டுச் செய்திகள்

## கேலோ இந்தியா நீர் விளையாட்டு விழா

- முதல் முறையாக நடைபெறும் கேலோ இந்தியா நீர் விளையாட்டுப் போட்டிகள் ஆனது (KIWSF) ஸ்ரீநகரின் தால் ஏரியில் நடைபெற உள்ளன.
- சாகசம், ஆற்றல் மற்றும் காஷ்மீரின் உணர்வைக் குறிக்கும் வகையில் இமயமலை மீன்கொத்திப் பறவை அப்போட்டிகளின் உருவச் சின்னமாக அறிமுகப்படுத்தப்பட்டது.
- KIWSF போட்டிகளில் நீர்ச் சறுக்கல், டிராகன் படகுப் பந்தயம் மற்றும் ஷிகாரா பந்தயம் போன்ற செயல் விளக்கப் போட்டி நிகழ்வுகளுடன் படகோட்டுதல், கேனோயிங் மற்றும் கயாக்கிங் போன்ற சிறு படகோட்டுதல் ஆகியவற்றில் பதக்கங்களுக்கான போட்டி நிகழ்வுகளும் அடங்கும்.
- 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் குல்மார்க் நகரில் கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டிகளுக்கான (KIWG) பனிச் சூழல்சார் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டதற்கு பிறகு, ஜம்மு & காஷ்மீரில் நடைபெறும் இரண்டாவது கேலோ இந்தியா போட்டி இதுவாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★